**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குநச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 800 ஹெக்டெயர் காணியின் பெயரளவுப் பெறுமதியாக ரூபா 4,237,429 நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அக் காணிகள் மீள் மதிப்புச் செய்யப்பட்டு அவற்றின் நியாயப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்புப் பெறுமதியை கணிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் இது வரை அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருககவில்லை. எனவே இது தொடர்பாக பணிப்பாளர் சபை வழங்கியுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் மதிப்பீட்டுத் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காணிகளின் பெறுமதி மீள் மதிப்புச் செய்யப்பட்டு அவற்றின் நியாயப் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மதிப்பீட்டு நிறுவனத்தினால் காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்பு பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 48 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு வருமானங்களை செலவுகளுக்கு எதிரீடு செய்து காட்டப்படாதிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் டேர்டன்ட் பீல்ட் தோட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 762,229 தொகையான செலவு அதன் வருமானமாகிய ரூபா 928,726 தொகைக்கு எதிரீடு செய்யப்பட்டு தேறிய வித்தியாசமாகிய ரூபா 167,547 தொகை நிதிக்கூற்றக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் பொல்காவலை உப அலுவலகத்தில் பணிக்கொடை செலவுகளுக்காக மிகை ஒதுக்கீடு செய்தல் ரூபா 30,520 தொகை மற்றும் ரூபா 332,208 தொகையான ஐயக் கடன்களுக்கான மிகை ஒதுக்கீடுகள் நிருவாகச் செலவுகளுக்கு எதிரீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் டேரன்ட்பில்ட் தோட்டத்தின் கணக்குகளைத் தயாரிக்கும் போது தேயிலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தேறிய வருமானமானது வருமானச் செலவுக் கணக்குகளில் பெறுவனவாக சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் வருமானங்கள், செலவுகளை தனித்தனியாக கணக்கீடு செய்வதற்கும் பொல்காவலை உப நிலையத்தினை உள்ளடக்கி நிறுவனத்தின் பணிக்கொடைச் செலவுகளை செம்மையாக்கும் தேறிய பெறுமதி வருமானச் செலவுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர் காலத்தில் ஒவ்வொரு உப நிலையங்களின் பணிக்கொடை செம்மையாக்கலை தனித்தனியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் ஐயக் கடன்களக்காக மிகை ஒதுக்கீடு செய்தல்கள் 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது செம்மையாக்குவதற்கு நடவடிககை எடுக்கப்படும் | வருமானங்களை செலவுகளுக்கு எதிரீடு செய்து காட்டாதிருத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 21 (உ) பிரிவின் | எதிர்காலத்தில் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் பாதீடு | நியமத்தில் உள்ளவாறு சமர்ப்பித்தல் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான பாதீட்டிற்குமிடையேயான ஒப்பீடோ அல்லது நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தரவுகளை தனியான ஒரு நிரலாகவோ காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்ட தரவுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட பணம் ரூபா 1,134,817 அதிகரித்தும் பணமற்ற செம்மையாக்கலின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் பணிக்கொடைக்கு ஒதுக்கீடு செய்தல் ரூபா 2,059,284 குறைத்தும் பணிக்கொடையாகச் செலுத்திய பணம் ரூபா 1,707,997 ஆல் அதிகரித்தலும் விசேட செயற்திட்டங்களுக்கான மாணியங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 4,117,396 ஆல் குறைத்தும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இல் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்கு கூற்றுக்களைத் தயாரிக்கும் போது காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானங்களின் அளவினை சரியாக இனங்கண்டு உள்ளடக்குவதற்கும் பணமற்ற செம்மையாக்கலின் கீழ் செம்மையாக்க வேண்டிய செயற்பாடுகள் முறைப்படியாக மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றுக்கு உள்ளபடியான காசு வெளிப் பாய்ச்சலும் காசு உட்பாய்ச்சலும் சரியாக செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 90 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரண வகுதியை மீள்மதிப்பு செய்யப்பட்ட பெறுமதியில் வெளிப்படுத்துகையில் செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்தல் செய்யப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துக்களுக்குரிய பதிவேடுகளில் மீள்மதிப்புச் செய்யப்பட்ட இயந்திரங்கள் | ஐந்தொயில் திரண்ட மிகை /பற்றாக்குறை உரிய கணக்கு குறிப்பு இலக்கம் 12 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. இந்த பதிவு இலக்கம் 12 இல் மீள் மதிப்பு மிகையை தனியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தில் காட்டப்பட்டுள்ள வெளிப்படுத்தல்கள் மற்றும் சரியான பெறுமதியை முறையாக நிதிக் கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வாகனங்களின் ஆரம்ப மீதிக்காக பிழையாக மீள்மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதிகள் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 164,236,655 தொகையான மீள் மதிப்பு இலாபமானது உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மீள்மதிப்பு மிகையாக தனியாக காட்டப்பட வேண்டிய போதிலும் அது திரண்ட பற்றாக்குறைக்கு செம்மையாக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி இருப்புக்களின் பெறுமதியானது கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் நிகர தேறக் கூடிய பெறுமதி கவனத்தில் கொள்ளப்படாது ரூபா 17,419,593 தொகையான புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் இருப்பு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | களஞ்சிய இருப்பின் பெறுமதியானது கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் இருப்புக்களின் பெறுமதியானது கிரயம் அல்லது நிகர தேறக் கூடிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்து நிதிக்கூற்றக்களில் காட்டுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| முன்னைய பல ஆண்டுகளாக பல்வேறு செயற்திட்டங்களுக்காக திறைசேரியிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 294,377,422 மொத்த தொகையான ஏனைய மூலதன மானியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்காக சபையின் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் காலக்கழிவு செம்மையாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு செயற்திட்டங்களுக்காக திறைசேரியிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டு மீதிகளை இனங்கண்டு பிற்போட்ட வருமானமாக செம்மையாக்கல் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய மூலதன மாணியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்காக சபையின் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க காலக் கழிவு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) பொதுத் திறைசேரியிடமிருந்து அமைச்சிடமிருந்து மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்திடமிருந்து சபைக்கு கிடைத்த மாணியங்களிலிருந்து மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 37,994,202 ஆக இருந்தும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுடன் ரூபா 100,185,893 தொகையானது மீளாய்வாண்டிற்கான செலவுகளாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையின் காரணமாக அச் செலவுகள் ரூபா 62,191,691 தொகையால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | தேசிய விஞ்ஞான மன்றத்தினால் விசேட மூலதன செயற்திட்டம் மற்றும் திறைசேரி மூலதன மானியத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கிடைத்த மானியங்களின் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் கீழ் ஒரு குறிப்பாக சுட்டிக் காட்டப்பட்டதுடன் அவற்றில் இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு தாக்கம் ஏற்படவில்லை. அவ்வாறே, ஆண்டிற்கான சரியான செலவை நிதிக் கூற்றுக்களில் பதிவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய செலவுகளை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) திறைசேரியிடமிருந்து பெற்ற மூலதன மானியங்களிலிருந்து மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டிள் போதும் மேற்கொள்ளப்பட்ட வருமானச் செலவுகள் ரூபா 34,223,423 தொகையானது அம் மூலதன மானியக் கணக்கிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக ரூபா 42,775.418 தொகையானது அக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதனால் மீதி ரூபா 8,551,995 தொகையினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | திறைசேரியிடமிருந்து பெற்ற மூலதன மானியங்களிலிருந்து மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் முன்னைய ஆண்டிற்கான மீதியுடன் மூலதன மானியக் கணக்கிலிருந்து நீக்கப்பட வெண்டிய போதிலும் தாமதத் தவறினால் அது மாற்றமடைந்துள்ளது. இதனை சரி செய்தலானது 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது மேற்கொள்ளப்படும். | இடம் பெற்றுள்ள கணக்கீட்டுத் தவறு சரி செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| கடன்பட்டோர் | 28,492,884 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் | 2017 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது அறவீடு செய்வதற்கு சிக்கலான மீதிகளில் ரூபா 23.173,704 தொகையைத் தீர்த்து வைப்பதற்காக தனியான கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. இம் மீதியினை உறுதிப்படுத்துவதற்காக பலஆண்டுகள் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கபட்டிருந்த போதிலும் அதற்காக போதியளவு பதில் கிடைத்திருக்கவில்லை. எனவே இது தொடர்பாக தனியான அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினூடாக பணிப்பாளர்ர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கின்ற தீர்மானத்தின் பிரகாரம் இம் மீதியினைச் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் கடன் பட்டோர் கட்டுப்பாடு சம்பந்தமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

**1.5.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனானஇணக்கமின்மைச் சற்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டவாறாகும்.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள். |
|---|---|---|---|---|
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு | கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடன் விடுமுறை பெற்று வெளிநாடு சென்று பிணை நிபந்தனைகளை மீறிய 04 உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டுகளிலிருந்து 28 ஆண்டுகள் வரையான காலமாக சபையினால் அறவிட வேண்டிய மீதி ரூபா 3,509,706 கூட்டு மொத்த தொகை சம்பந்தமாக அந்த புலமைப்பரிசிலாளர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்காததுடன் உரிய கோவைகள் காணாமல் ஆக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. | கல்வி நடவடிக்கைகளுக்காக சம்பளத்துடன் விடுமுறை பெற்று பிணை முறிகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை தாபன விதிக் கோவை யிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அந் நான்கு நபர்களின் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இந் நான்கு நபர்களின் மீதியை அறவிடு செய்வதற்கு இதுவரை முடியாதிருந்தது. எவ்வாறாயினும் இம் மீதியை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | வெளிநாடு சென்று பிணை நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கொவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன். உடன்படிக்கைகளின் சரியானதன்மை மற்றும் கோவைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக முறையான கட்டுப்பாட்டினைப் பேணுதல் வேண்டும். |
| **(ஆ)** | 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை. | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,050,000 தொகையான 29 ஆண்டுகளுக்கும் 37 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் பழைமை வாய்ந்த 03 வாகனங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் எடுத்திருந்தும் | பழைய வாகனங்களை அகற்றுவதற்காக சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க கைதவிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றில் இரண்டு வாகனங்கள் உரிய | சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அவ்வாகனங்களை கை தவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையாளர்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் பயன்படுத்த முடியாத கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய வாகனங்களை இணங்கண்டு எதிர்காலத்தில் சுற்றறிக்கை தொடர்பாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 53,790,676 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாகுறை ரூபா 21,250,394 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 32,540,282 தொகையான பற்றாக்குறையில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மானியம் மற்றும் வருமானங்கள் அதிகரித்திருந்தும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 127,066,371 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

#### 2.2.1 வருமானம்

- மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியங்களுடன் சபையின் மொத்த வருமானம் ரூபா 666,913,741 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் ரூபா 572,387,651 ஆக இருந்தமையானது மொத்த வருமானங்களுடன் ஒப்பிடும் போது 16 சதவீத அதிகரிப்பாகும் அரசாங்கத்தின் மானியத்தைத் தவிர்த்து தோட்டங்களின் மொத்த இலாபம் மற்றும் ஏனைய வருமானங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 20,958,109 ஆல் அல்லது 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- சபைக்குச் சொந்தமான நான்கு தோட்டங்களுக்கு மத்தியில் மூன்று தோட்டங்கள் மீளாய்வாண்டின் போது நட்டம் அடைந்திருந்ததுடன் ஒரு தோட்டம் மாத்திரம் இலாபம் அடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் போது ரூபா 5,858,799 தொகையான குமாரவத்தையின் நட்டமானது மீளாய்வாண்டின் போது ரூபா 7,070,125 வரையும் முன்னைய ஆண்டின் போது ரூபா 12,877,030 இலாபம் அடைந்த டேர்டன்ட்பீல்ட் தோட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 10,622,791 நட்டத்தையும் முன்னைய ஆண்டில் ரூபா11,883,378 தொகையான குருவிட்ட தோட்டத்தின் இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,797,383 வரையும் குறைவடைந்திருந்தது.

#### 2.2.2 செலவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செலவு ரூபா 720,704,417 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான மொத்த செலவாகிய ரூபா 593,638,045 தொகையுடன் ஒப்பிடும் போது 21 சதவீத அதிகரிப்பாகும்.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| விடயம் | மீளாய்வாண்டிற்கான பெறுமதி | முன்னைய ஆண்டிற்கான பெறுமதி | முன்னைய ஆண்டுடனான பெறுமதி | முன்னைய ஆண்டுடனான மன்றத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 658,988,975 | 415,335,329 | 243,653,646 | 58.6 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 167,780,816 | 206,808,430 | (39,027,614) | (18.8) |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 97,756,040 | 59,502,966 | 38,253,074 | 64.2 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 143,314,133 | 130,991,234 | 12,322,899 | 9.4 |
| உரிமை மூலதனம் (மூலதன மற்றும் ஒதுக்கம்) | 585,699,618 | 431,649,559 | 154,050,059 | 35.7 |

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டுகளில் சபையின் தொழிற்படு மூலதன விகிதம் கீழே தரப்படுகின்றது.

| | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.7:1 | 3.5:1 | 3.1 |
| விரைவு விகிதம் | 1.5:1 | 3.2:1 | 3.1 |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான அளவ்வ நாரம்பொல மற்றும் மொனராகலை குமாரவத்த ஆகிய காணிகளில் ரூபா 16,301,964 தொகை செலவு செய்து அலுவலகக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அக் காணிகள் சட்டரீதியாக சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான அளவ்வ நாரம்பொல மற்றும் மொனராகலை குமாரவத்த ஆகிய காணிகளின் உரிமையை பொறுப்பேற்றதற்காக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>அமைச்சின் மூலம் இக் காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அந்த சட்டரீதியான நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் நிறுவனத்திற்கு இக்காணிகள் சட்டரீதியாக உரிமையாகும். | சபைக்குச் சொந்தமற்ற காணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதனால் அக்காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கையினை தாமதிக்காதிருத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேசிய இறப்பர் உற்பத்தியினை மேம்படுத்தலானது சபையின் பிரதான குறிக்கோளாக இருந்ததுடன் வருடாந்த வினைத்திறனானது ஒரு ஹெக்டெயருக்கு 1500 கிலோ கிராமிற்கும் 3,000 கிலோ கிராமிற்கும் இடைப்பட்டதான உயர்ந்த தொகுதியின் க்ளோன் சேர்மானமானது 2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததும். தொகுதிக் தோட்ட கைத்தொழில் அமைச்சின் 2008 ஆம் ஆண்டிற்கான யெலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வருடாந்த விளைச்சலானது ஒரு ஹெக்டெயர்ருக்கு 780 கிலோ கிராம் அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | ஒரு ஹெக்டெயருக்கு வருடாந்த உலர்த்திய இறப்பர் 3,000 கிலோ கிராம் அளவில் வழங்கக் கூடிய க்ளோன் இறப்பரினை ஆராய்ச்சி நிறுவனம் சிபார்சு செய்திருந்தும் அந்தக் க்ளோன் இறப்பரை பயிரிட்டு அவற்றிலிருந்து விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான காரணிகள் துறையில் காணப்படுதல் வேண்டும். பிரதானமாக<br>1. ஒரு ஹெக்டயருக்கு இருக்க வேண்டிய மரங்கள் 450 இற்கு மேற்பட்டு காணப்படுதல்.<br>2. காணப்படுகின்ற மரங்களின் அளவானது சிறந்த முன்னேற்றகரமான நிலையில் காணப்படுதல்.<br>3. பசளைகள் இடப்படுதல்<br>4. சரியான முறைமையில் பால் வெட்டுதல்.<br>ஆகிய அத்தியாவசியமான காரணிகள் நிறைவேற்றப்பட்டிருக்காததனால் இலங்கையில் தற்பொழுது காணப்படுகின்ற பல பயர்களிலிருந்து குறைந்த விளைச்சலே கிடைக்கின்றது மேலும், இக்காரணிகளை சரி செய்தலானது தொடக்கத்தில் 03 – 04 ஆண்டுகளுக்குள் மாத்திரம் மேற்கொள்ளப்படலாம் என்பதனால் இவ்விடயங்களை சரியாக நிறைவேற்றி புதிதாக நடுகை செய்யப்படுகின்ற பயிர்களிலிருந்து மாத்திரம் மேலே குறிப்பிட்ட அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. | தேசிய இறப்பர் உற்பத்தியினை மேம்படுத்துதல் சபையின் பிரதான குறிக்கோள் என்பதனால் அக் குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் |